அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 5/89

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்- கொழும்பு. 7
26 ஜனவரி, 1989.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம்

பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு 1989ஆம் ஆண்டில் 1000/-ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணமொன்றை வட்டி இல்லாது கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(அ) பதவிநிலைத்தரங்களைச் சேராத எல்லா நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள். பதவி நிலைத் தரத்தைச் சேராத உத்தியோகத்தர் எனப்படுபவர் வருடமொன்றுக்கு 27,000/-ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட புதிய ஆரம்பச் சம்பளத்தையுடையவரும் வருடாந்த சம்பள ஏற்றமாக 600/-ரூபாவைப் பெறுபவருமான ஒரு அரசாங்க உத்தியோகத்தராவர்.

(ஆ) முற்பணம் வழங்கப்படும் திகதிக்கு உடனடுத்து முன்பாக 3 மாதங்களுக்குக் குறையாதவாறு தொடர்ச்சியான சேவையையுடையவரும், பதவி நிலைத் தரத்தைச் சேராதவரும் தற்காலிக அல்லது அமய அடிப்படையில் சேவை புரிபவரும், கடன் திருப்பிப் பெறப்படும் முழுக் காலப் பகுதி(உதா-குறைந்தது 1989 டிசம்பர் இறுதி வரையில் தொடர்ந்து சேவை புரிவார் என்பதற்கான உறுதியுடையவர்களுமான அரசாங்க உத்தியோகத்தர் இந்த விசேட முற்பணத்தைப் பெறத் தகுதியுடையவராவர்.

02. இம்முற்பணம் 01.02.1989ஆந் திகதிக்கும் 31.03.1989ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொடுத்து முடிக்கப்படுதல் வேண்டும்.

03. இம்முற்பணம் "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில்" பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

04. இம்முற்பணம் சமதொகையைக் கொண்ட 10 மாதாந்த தவணைக் கட்டணங்களில் அறவிடப்பட்டு உரிய முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

05. திணைக்களங்களின் தலைவர்கள் முற்பணக் கணக்குகளின் வரையறைகளை தேவையான இடத்து திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

06. இம்முற்பணக் கணக்கில் செய்யப்படும் அறவீடுகள் நி.பி.238இலும், தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 3இலும் தரப்பட்ட 40% அல்லது 33 1/3%தின் வரையறைகளுக்குட்பட்டதாயிராது.

07. இம்முற்பணக் கொடுப்பனவுக்கு பிணை நிற்போர் தேவையில்லை.

08. இடமாற்றஞ் செய்யப்படும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தமாக முற்பணக் கணக்கில் அறவிடப்படும் முற்பணம் தொடர்பில் வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும்.

09. இத்திட்டத்தின் கீழ் முற்பணம் பெற்ற பணியாளரொருவர் பணியில்லாது போகுமிடத்து அத்தகைய பணியாளரிடமிருந்து வருமதியாகவுள்ள முற்பணமீதி அவரது ஓய்வூதியம்/ஏற்பாட்டு நிதியம்/ஏமப்பணம்/பணிக்கொடை அல்லது அவருக்குக் கொடுக்கற்பாலதான வேறேதேனும் பணத்திலிருந்து அறவிடப்படுகின்றதென்பதை உரிய நிறுவனங்களின் சம்பள, தாபன அலகுகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10. இந்த முற்பணமானது 03.06.1985ஆம் திகதியையும் 293ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணத்துக்கு/கடன்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுகிறது.

11. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைச்சேரியின் சம்மதத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்.
தாபனப் பணிப்பாளர்.